Judicial Form No.53
(Sec.Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, MAGISTERIAL LEVEL No.II, POONAMALLEE

Calender :
Miscellaneous : Case No. **STC No.249/2022, 862/2022**

Preliminary Register :
Sessions
Deposition of witness for : Prosecution
Defence :PW1
Court

Name : துரைசாமி
Fathers/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18/02/2026

**குறுக்கு விசாரணை**

1. 10.12.2017 ல் எதிரிக்கு கொடுத்ததாக கூறப்படும் ரூ.4,00,000 எனது கையில் இருந்தது என்பதை காண்பிப்பதற்கு எந்த ஒரு ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், எனது சேமிப்பு பணம் ஆகும். நான் வருமாணவரி தாக்கல் செய்கிறேனா என்றால் நிறுவனத்தில் இருந்து சேலரியில் பிடித்தம் செய்வார்கள். 2017 காலகட்டத்தில் எனது வருமாணம் எவ்வளவு என்றால் மாதம் சுமார் ரூ.45,000 ஆகும். வருமாணவரி செலுத்துகிறேனா என்றால் நிறுவனத்தில் இருந்து பிடித்தம் செய்வார்கள். ரூ.4,00,000 வருமாணவரியில் காண்பித்துள்ளேனா என்றால் எனது சேலரி மூலமாக பெற்ற தொகை ஆகும்.

2. 2017 ல் மாதம் ரூ.45,000 வருமாணம் பெறுகிறேன் என்பதை காண்பிப்பதற்கு ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான், தற்போதைய சேலரி பில் என்னிடம் உள்ளது. ம.சா.ஆ.1 மற்றும் வழக்கு காசோலையில் உள்ள எதிரியின் கையொப்பம் என சொல்லப்படும் கையொப்பங்கள் வேறுபட்டுள்ளது என்றால் சரிதான், எதிரி தான் கையொப்பம் இட்டார். வழக்கு காசோலை எதிரியின் கையொப்பங்கள் வேறுபட்டுள்ளது என்று தான் திரும்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. 10.12.2017 ல் எதிரிக்கு பணம் கொடுத்தாக புகாரில் கூறியிருக்கும் பட்சத்தில் அதற்கு முரணாக ம.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பில் 2017 ஜனவரி முதல் வட்டி தரவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் 2017 டிசம்பரில் பணம் கொடுத்தேன், அதன் பின்பு தான் வட்டி தரவேண்டும். 2017 ஜனவரி முதல் வட்டி தரவேண்டும் என்று அறிவிப்பில் கூறி உள்ளது தவறான சங்கதி என்றால் சரிதான், பணம் கொடுத்ததில் இருந்து தான் வட்டி தரவேண்டும். வழக்கு காசோலை எந்த தேதியில் நான் பெற்றேன் என்று புகாரில் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பாக குறிப்பிடவில்லை, 2022 பிப்ரவரி மற்றும் ஏப்ரலில் காசோலைகள் பெற்றேன்.

4. 2022 பிப்ரவரி மற்றும் ஏப்ரலில் தான் எதிரி காசோலைகள் கொடுத்தார் என்று உறுதியாக கூறுகிறேனா என்றால் சரிதான். 2022 பிப்ரவரி மாதம் முதல் காசோலை கொடுத்து ரிட்டன் ஆகி இருக்கும் பட்சத்தில் மீண்டும் ஏப்ரலில் எதிரி மற்றொரு காசோலை கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல, 2022 பிப்ரவரியில் 2 காசோலைகளையும் கொடுத்துவிட்டார், வெவ்வேறு தேதிகள் குறிப்பிட்டுள்ளார்.

(குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது).